முருகப்பெருமான் துணை

**மகான் கண்ணானந்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.01.2024,** புதன்கிழமை

1. வரம் தந்து ஞானவான்களை
வையகம் எங்கிலும் உருவாக்க
சரவணச் சுடரேற்றி அருளும்
சற்குருவே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அறிவிப்பேன் சோபகிருது சிலை திங்கள்
வரங்களாக மூவாறுதிகதி புந்திவாரம்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 18 ம் நாள், 03.01.2024, புதன்கிழமை)
வழங்குவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை கண்ணானந்தர் யானும்
அறிவிப்பேன் உலகோர் நலம்பெற
நேசக்கரம் கொண்டு அரங்கன்
நிலவுலகில் தரும சேவை ஆற்றி
4. ஆற்றியே மக்களின் பசிபிணி
ஆக்கமுடன் விரட்டி நின்று
மாற்றம் தருவேன் என உலகில்
மகத்துவம் கண்டிட தீட்சை ஆசி
5. ஆசியுடன் காட்டி சுத்தநெறி
அறிவிப்பேன் சாத்வீக வழியாக
நேசம்பட அருளி மக்களிடை
நீதி நெறிமுறை வளர்க்க
6. வளர்க்கவே உலகம் எங்கிலும்
வள்ளல் தன்மை கொண்ட
தளர்விலா தொண்டர் படைகளாக
தருமவான்களாக சக்தி கூடி

7. கூடியே அரங்கன் அவதார
கொள்கை நிறைவேறும்படி
நாடெங்கிலும் மாற்றம் ஞானமாக
நல்சிந்தை மாற்றம் ஆகவே கண்டு

8. கண்டுமே வேலவன் ஆசிபட
கலியுகத்தார்கள் எல்லோருமே
தொண்டர்களாக உருமாறி
தெய்வநெறி காட்டும் அரங்கன்

9. அரங்கன் வழி ஞானிகளாக
அற்புதம் கண்டுத் தேறி
வரங்களால் உலகத்தையே
வடிவேலனார் தலைமை உருவாக்கும்

10. உருவாக்கும் ஞான சபையாக
உலகினில் ஞான ஆட்சியை
உருவாக்கி கலியிடரை கடப்பர்
உண்மை உழைப்பு உயர்வு என

11. என கருதும் உத்தமர்களே
இந்த உலகில் அதிகாரவர்க்கமாக
ஞானத்தலைமை படைப்பர்
நாட்டிய துல்லிய ஆசிமுற்றே

–சுபம்–